செ.வெ.எண்: 75/2017 நாள்: 27.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் தலைமையில், மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (27.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (27.01.2017) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் நவம்பர் மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 81 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 25 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 11 என மொத்தம் 117 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

நமது மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை போதிய அளவு இல்லாததால் பாசன அணைகளிலும், தண்ணீர் மிக குறைந்த அளவே உள்ளது. அணைகளில் நீர்மட்டம் உயர்ந்தவுடன், ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட குறும்பனையிலுள்ள குளங்களுக்கு நீர் நிரப்பி, தேவையான தண்ணீர் வழங்கப்படும் எனவும், மணக்குடி மற்றும் கீழமணக்குடி கிராமங்களில், மணக்குடி ஊராட்சி நிர்வாகம் மூலம் பழுதான மின்கம்பம், மின்கம்பி மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும், மேலும், அதே ஊராட்சியில் புதிய மேம்பாலத்தில் உள்ள மின் விளக்குகள் மாற்றி, புதிதாக LED விளக்கு மாற்றப்பட்டு வருகிறது எனவும், சின்னத்துறை, இரவிபுத்தன்துறை பகுதிகளில் மீன் இறங்கு தளம் அமைப்பதற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. இதற்கான பணி உத்தரவு பெறப்பட்டு, விரைவில் பணி துவங்கப்படவுள்ளது எனவும், கடலில் மீன்வளத்தை பாதுகாத்திட செயற்கை பவள பாறைகள் அமைப்பது தொடர்பாக மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம், கொச்சின் மூலமாக இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, செயற்கை பவள பாறைகள் அமைப்பது தொடர்பான கருத்துருக்கள் இறுதி செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது எனவும், தமிழ்நாடு கடல்சார் பல்கலைக் கழகத்தின் பயிற்சி மையத்தை கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரை கிராமங்களில் அமைப்பது குறித்த கருத்துரு மீன்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது எனவும், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலமாக ஓய்வூதியம் பெறுவது தொடர்பாக, தகுதியுள்ள மீனவ பயனாளிகளின் பட்டியலானது, ஏற்கெனவே மீன்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு பெறும் பட்சத்தில், ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், மரிய எல்சி, க/பெ. அல்போன்ஸ், இணையம்புத்தன்துறை என்ற இடத்தை சார்ந்தவருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.